OS 112/2023
வா.சா.3 ராஜேந்திரன் த/பெ கோவிந்தசாமி
நாள் 04.03.2025

**குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதி ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. நானும் பிரதிவாதியும் வெவ்வேறு அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. எனக்கும் பிரதிவாதிக்கும் பிரதிவாதியின் நிலத்திற்கு தண்ணீர் விடுவது சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ2 உயில் ஆவணம் எழுதியவரான நடப்பா என்கிற சின்னகுழந்தை பிள்ளை என்பவரிடம் இருந்து நான் சொத்து எதுவும் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். மேற்படி நடப்பா என்கிற சின்னகுழந்தை பிள்ளை என்பவரிடம் நான் வட்டிக்கு பணம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை.

3. வா.சா.ஆ2 உயில் ஆவணத்தில் நான் எங்கள் ஊரில் வைத்து தான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன். என்னுடைய ஆவணமும் அன்றைய தேதியில் தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் அதே தேதியில் தான் என்னுடைய ஆவணமும் பதிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது கேட்பதால் தான் சொல்கிறேன்.

4. தாவா 1வது அயிட்ட சொத்தான சர்வே நம்பர்283/4 சம்மந்தமான பட்டா பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ2 உயிலினை எழுதிய மார்கபந்து என்பவர் ஊரில் வைத்து தான் உயிலினை எழுதினார் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் வா.சா.ஆ2 உயில் எழுதப்படவில்லை என்றும் நான் அதே சமயத்தில் என் ஆவண பதிவு சம்மந்தமாக சென்ற போது சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.